பக்கங்கள் 21+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 10 வெள்ளிக்கிழமை 26.09.2025 | அதிர்வு 57



'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# நல்லூரில் உணர்வெழுச்சியுடன் தியாக தீபத்தின் நினைவேந்தல்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா விரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு இன்று யாழ்ப் பாணம் - நல்லூர் பின் வீதியில் அமைந் துள்ள அவரது நினைவிடத்தில் உணர் வெழுச்சியுடன் நடைபெற்றது.

தியாக தீபம் திலீபனின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு மாவீரர் ஒருவரின் தாய் பொதுச்சுடர் ஏற்றினார்.

05▶





# நல்லூரில் உணர்வெழுச்சியுடன் தியாக தீபத்தின் நினைவேந்தல்

















# நல்லூரில் உணர்வெழுச்சியுடன் தியாக தீபத்தின் நினைவேந்தல்


















# நல்லூரில் உணர்வெழுச்சியுடன் தியாக தீபத்தின் நினைவேந்தல்















## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து தியாக தீபத்தின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை, சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்திலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் தூக்குக் காவடி ஒன்று நினைவிடத்துக்கு வந்ததுடன் , யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஊர்திப் பவனிகள் வந்திருந்தன.

இந்த நிகழ்வில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், பல்கலைக் கழக சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாகத் திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாகப் பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, தியாக தீபம் திலீபன் 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி நல்லூர் ஆலய வீதியில் நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் இருந்தார். அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் 12 நாட்களின் பின்னர் 26ஆம் திகதி அவர் சாவைத் தழுவிக்கொண்டார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தெற்கின் பண்பு

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அஹிம்சை வழியில் - காந்திய நெறியில் - ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் உண்ணா நோன்பு இருந்து தன் உயிரையும் உடலையும் தமிழ் மண்ணுக்கு ஈந்தவன் நம் தியாகி திலீபன்.

அவனது முப்பத்தியெட்டாவது நினைவு தினம் இன்றாகும். அதனை ஒட்டி தற்போதைய ஆட்சியாளர்களின் இரட்டை வேட முகத்தை அம்பலப்படுத்தி இருக்கிறார் இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்.

தம்முடைய எக்ஸ் தளத்தில் அவர் இன்று குறிப்பிட்டுள்ள செய்தி அவதானிக்கத்தக்கது.

''1987 செப்டம்பர் 15 ஆம் திகதி நல்லூர்கந்தசாமி கோவிலில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கி, உணவு அல்லது தண்ணீர் இல்லாமல் 12 நாள்களுக்குப் பிறகு செப்டம்பர் 26 அன்று இறந்த திலீபனின் (இராசையா பார்த்திபன்) நினைவு தினம் இன்று. தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல் மற்றும் தமிழ் பொதுமக்களிடையே பெரும் துன்பத்தை ஏற்படுத்திய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) ரத்து செய்தல் உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளை மையமாகக் கொண்டது அவரது போராட்டம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இலங்கையின் தற்போதைய வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத், திலீபனின் சாகும் வரை யான உண்ணாவிரதத்தை ஒரு நியாயமான போராட்டம் என்று விவரித்தார், மேலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால் இப்போது ஆட்சியில் இருக்கும் அவர், இலங்கை மீதான பிரேரணையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ரத்து செய்யப்படுவதைச் சேர்க்க வேண்டாம் என்று ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிடம் கேட்டுக் கொண்டார் எனக் கூறப்படுகிறது. - இது முந்தைய வார்த்தைகளிலிருந்து தற்போதைய நடவடிக்கைகளுக்கு ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.''

- என்று தேசிய மக்கள் சக்தியின் முகத்திரையை கிழித்து அவர்களின் உண்மைத் தோற்றத்தை அம்பலப்படுத்தி இருக்கிறார்சாணக்கியன்எம்.பி.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி தென்னிலங்கை உட்பட இலங்கை முழுவதும் கையெழுத்துப் போராட்டங்களை முன்னெடுத்த போது எதிர்க்கட்சி வரிசைகளில் இருந்தபடி அந்த போராட்டங்களுக்கு முழுமையாக ஆதரவு தந்து, ஒத்துழைத்து, ஊக்குவித்தது தேசிய மக்கள் சக்தி.

இப்போது அதன் ஜனாதிபதியாக இருக்கும் அநுர குமார திஸநாயக்க அந்தச் சமயத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு அந்தப் போராட்டங்களுக்கு முழு ஆதரவு தந்தவர். அது மாத்திரமல்லர், பயங்கரவாத தடுப்புச் சட்டம் மாற்றீடின்றி முழுமையாக அடியோடு நீக்கப்பட வேண்டும் என்று அவர் குரல் எழுப்பியவர்.

இப்போது அதிகாரத்துக்கு வந்து ஒரு வருடம் முடிந்த பின்னரும் இன்னமும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கும் நடவடிக்கையை அவரது அரசு முன்னெடுக்கவில்லை. எடுப்பதாக வெறும் ஆரவாரம் காட்டுகிறது. அந்தச் சட்டத்தை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்று கூறிய அநுர குமார திஸநாயக்க, இப்போது ஜனாதிபதியாகி அதற்கு மாற்றீட்டுச் சட்டம் பற்றி அதிகம் பேசுகிறார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடான சட்டம் தயாரான பின்னர் தான் இருக்கும் சட்டம் நீக்கப்படும் என்று நீட்டி முழக்குகின்றார்.

எதிரணியில் இருக்கும் போது பேசுவது ஒன்று. ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும் செய்வது ஒன்று. இதுதான் சிங்களத்து ஆட்சித் தலைமையின் வழமையான பரவணிப் பண்பு.

# தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவு நிகழ்வு வடக்கு, கிழக்கில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு!

தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று (26) வடக்குக் கிழக்கில் தமிழர் தாயகம் எங்கும் பல்வேறு இடங்களிலும் இடம்பெற் றது.

உணர்வு பூர்வமாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.

## புதுக்குடியிருப்பில்...

**(பா.சதீசன்)**

தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று காலை புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. புதுக்குடியிருப்பு வர்த்த சங்க தலைவர் நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில், புதுக்குடியிருப்பு வர்த்தகர்கள் தங்களது கடைகளை மூடி தீயாக தீபம் திலீபனுக கான அஞ்சலி செலுத்தியிருந்தார்.

பொதுச் சுடரைச் சட்டத்தரணி தனஞ் சயன் ஏற்றிவைக்க அதனை தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் உருவப்படத்துக்கு வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் மலர் அஞ்சலி செலுத்தினர. நினைவுரையுடன் அஞ்சலி நிகழ்வு நிறைவடைந்தது.





















## திருமலை சிவன் கோயிலடியில்...

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வு இன்று (26) திருகோணமலை சிவன் கோயிலடி முன்றலில் இடம் பெற்றது. இதனை சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்தனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப் பாளர் கண்டுமணி லவகுசராசா,

அஹிம்சை வழியில் போராடிய தியாக தீபம் திலீபன் ஈழ மக்களின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து தனது உயிரைத் துறந்தார்.

23 வயதில் மருத்துவ மாணவனாக இருந்த போது அப்போதைய காலத்தில் சிங்கள பேரினவாத காலணித்துவர்களால் அடக்கு முறை பிரயோகிக்கப்பட்டது இந்த நிலையில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட போது அரசு ஊர்காவல் படையினருக்கு ஆயுதங்களை வழங்கியிருந்தனர். இந்திய மகாத்மா காந்தி போன்று அஹிம்சை வழியில் போராடியபோது நிராயுதபாணியாகச் செயற்பட்டு மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டவரே தியாக தீபம் திலீபன். அவசர கால சட்டத்தை நீக்குதல், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோருதல், வீதியோர இராணுவ முகாம்களை அகற்றல், போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஈழ மக்களுக்காக உண்ணா விரதம் இருந்தபோது உயிர் துறந்தார்.

ஐக்கிய நாடுகள் பேரவையின் ஜெனீவா மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர், உள்ளகப் பொறிமுறை ஊடாகத் தீர்வை வழங்குவோம் என்று தெரிவித்துள்ளார். ஆனாலும் உள்ளக பொறி முறை மீது நம்பிக்கை இல்லை. சுயாதீனமான சர்வ தேச பொறி முறை ஊடாக நீதி கிடைக்க வேண்டும் என்று இந்த தருணத்தில் கோரிக்கை விடுக்கிறோம்.- என்றார்.










## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை...

தியாக தீபம் திலிபன் தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளுக்கு எதிராகப் போராடினார். அவர் எமது மக்கள் தாயகத்தில் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக அகிம்சை வழியில் தன் இன்னுயிரைத் தியாகம் செய்தார். தியாக தீபத்தின் நினைவுகளை எமது மக்கள் வரலாற்று ரீதியில் என்றும் நினைவு கூர்கின்றனர் என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பிரதேச சபையில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் அஞ்சலியுரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக அகிம்சை வழியில் தன் உயிரை நீராகாரம் ஏதும் அருந்தாது ஆகுதியாக்கிய மகானுக்கு தமிழர் தேசம் அஞ்சலிக்கின்றது. இன்றும் தியாக தீபம் திலிபன் எதற்காகப் போராடினாரோ அவரது போராட்டத்துக்கான காரணங்கள் தீர்க்கப்படாது அவ்வாறே காணப்படுகின்றன. அரசுகள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த போதும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான அடிப்படைகளில் எவ்வித மாற்றத்தையும் செய்யவில்லை.

இலங்கையில் பௌத்த சிங்கள பேரினவாதம் அவ்வாறே காணப்படுகின்றது. அந்தப் பௌத்த சிங்கள பேரினவாதத்தைத் திறன்பட முன்னெடுக்கத்தக்க சட்டங்கள் வலுவில் காணப்படுகின்றன. அரசமைப்பில் மாற்றங்கள் கொண்டு வரப்படவில்லை. குறைந்தபட்சம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்படவில்லை. எமது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு குறைந்தபட்ச பொறுப்புக்கூறல் ஏனும் இடம்பெறவில்லை.

யதார்த்தம் இவ்வாறிருக்க நடைமுறையில் இப்போதைக்கு பிரச்சினையில்லை என்று அரசு சமாளிப்புச் செய்கின்றது. இனப் பிரச்சினையை மனிதாபிமானப் பிரச்சினைக்குத் தீர்வின்றி நடைமுறையில் அரச நிர்வாகத்தில் சமாளிப்புக்களைச் செய்வதன் வாயிலாக எல்லோரையும் ஏமாற்ற அரசு நினைக்கின்றது.

இவ்விடத்தில் நாங்கள் ஓர் இனமாக இலட்சியத்தால் ஒன்றுபட்டவர்களாக சர்வதேசம் ஏற்றுக்கொண்ட எமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடவேண்டியுள்ளது. அதற்குத் தியாகி திலீபனின் தியாகங்கள் எமக்கு வழிகாட்டியாக வுள்ளன. - என்றார்.



# மன்னாரில்...

**(எஸ்.ஆர்.லெம்பேட்)**

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில், தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவு தின அஞ்சலி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை (26) காலை மன்னாரில் நினைவு கூரப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது அன்னாரின் உருவப் படத்துக்குச் சுடர் ஏற்றப்பட்டு, மாலை அணிவிக்கப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

















# மன்னார் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில்...

(எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை ஏற்பாடு செய்த, தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவு தின அஞ்சலி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை (26) காலை 10.30 மணியளவில் மன்னார் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தியாக தீபம் திலீபனின் உருவப்படத்துக் குச் சுடர் ஏற்றி மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நினைவு உரைகள் இடம்பெற்றன. நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை பிரதிநிதிகள், கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.











# வவுனியாவில்...

(கி.வசந்தன்)

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தால் தியாகி திலீபனின் 38 ஆவது நினைவு தினம் இன்று (26) அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த அஞ்சலி நிகழ்வானது வவுனியாவில் உள்ள பொங்கு தமிழ் தூபி முன்பாக அமைக்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் கொட்டகையில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் திலீபனின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.





# பருத்தித்துறையில்...

தியாகி திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தலின் இறுதிநாள் நிகழ்வுகள் பருத்தித்துறை மக்களால் பருத்தித்துறை தியாக தீபன் திலீபனின் நினைவாலயத்தில் இன்று காலை 8 மணிமுதல் அடையாள உண்ணாவிரதத்துடன் வடமராட்சி மக்களால் நினைவேந்தப்பட்டது.

மவீரர்களான புட்சித்தமிழ், அவர்களது பெற்றோர் பரஞ்ஜோதி தவமணி பொது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. தியாகி திலீபன் அவர்களது திருவுருவ படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கலந்துகொண்டவர்களால் மலர் அஞ்சலிகள் செலுத்தப்பட்டன.

இதில் பருத்தித்துறை மௌலவி, இந்து சமய குரு, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என்று பலரும் கலந்து கொண்டு தியாகி திலீபன் மலரஞ்சலி செலுத்தினர்.












# வவுனியா தமிழரசுக் கட்சி அலுவலகத்தில்...

தியாகதீபம் திலீபனின் நினைவு தினம் இன்று (26) இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.


தியாகதீபத்தின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து நினைவுச் சுடரும் ஏற்றப்பட்டு மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன்போது, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைவர் பாலகிருஸ்ணன் பாலேந்திரன், வவுனியா மாநகர சபைத் துணை முதல்வர் பரமேஸ்வரன் கார்த்தீபன், மாநகர சபை உறுப்பினர்களான வரலக்சுமி, அருணன், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட செயலாளர் நடராசா கருணாநிதி, பொருளாளர் சி.சந்திரசேகரம், பிரதேச கிளை பொருளாளர் மு.விஜயகாந்தன், கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் நா.சேனாதிராசா உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டனர்.










## யாழ். பல்கலைக்கழத்தில்...

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெற்றது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் நண்பகல் 12 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு, பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்குப் பல்கலைக்கழக சமூகத்தினரால் மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











## வற்றாப்பளையில்...

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு, வற்றாப்பளையில் தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி நிகழ்வு இன்று (26) இடம்பெற்றது.

சமூக செயற்பாட்டாளரும், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினருமான ஞா.யூட்சன் தலைமையில் வற்றாப்பளையில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் நிகழ்வு இடம்பெற்றது. நினைவு சுடர் ஏற்றத்தின் பின்னர் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள், பொது அமைப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர்.









# வேலணையில்...

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், வேலணை – வங்களாவடி பகுதியில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் திலீபனின் நினை வேந்தல் நிகழ்வு இன்று நடைபெற்றது.

இதன்போது, பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் நிகழ்வில் மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.
























# அம்பாறையில்...

(பாறுக் ஷிஹான்)

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு அம்பாறையில் அனுஷ்டிக்கப்பட்டது.


இந்த நிகழ்வு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் காரைதீவு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் திலீபனின் உருவப்படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் கட்சி ஆதரவாளர்கள் உறுப்பினர்கள் என பலரும் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டனர்.











# முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி இடமாற்றம்

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாகக் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி வந்த நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் நேற்று (25) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.


அவர் தனது பதவிக் காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் இயற்கை வளங்களை பாதுகாப்பது, சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் நடுநிலையானதும் அர்ப்பணிப்பு மிக்கதுமான நீதிச்சேவை செய்ததோடு, கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரம், நில ஆக்கிரமிப்புகள், பௌத்தமயமாக்கல் முயற்சிகள் தொடர்பான பல முக்கிய வழக்குகளிலும் பாரிய பங்கு வகித்தார்.

நீதிபதி தர்மலிங்கம் பிரதீபனின் அர்ப்பணிப்பான சேவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தாலும் நீதிமன்ற சமூகத்தாலும் அவர் கௌரவிக்கப்பட்டார்.









# தமிழர் தேசம் போராடுகிறது...!

(தமிழ் மக்களுக்காக 12 நாள் உண்ணா நோன்பு இருந்து தனது உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வின் இறுதி நாளை முன்னிட்டு இந்தக் கவிதை பிரசுரிக் கப்படுகிறது.)

தியாக வேள்வியில் - குதித்த
பார்த்தீபனை பாரத தேசம்
கண்டு கொள்ளவில்லை
நல்லூரான் வீதியில்
பிரிந்தது அவனுயிர்..!

தமிழர் தேசம் கண் கலங்க
நல்லூரான் வீதி - கண்ணீர்
மழையில் நனைந்தது
யாரறிவர் காந்திய தேசம்
இப்படி செய்யுமென..!

அகிம்சை தேசத்துக்கே - நீ
அகிம்சையைப் போதித்தாய்
பன்னிரு நாள் பசித்திருந்து
உனதுடலை உருக்கி
தியாக தீபமானாய்..!

ஐந்தம்சக் கோரிக்கையும்
ஆண்டுகள் முப்பத்தெட்டு
கடந்தும் தீர்க்கப்படவில்லை
உன் நினைவுதனை
நெஞ்சிலே சுமந்து தமிழர்
தேசம் போராடுகிறது..!



- ஆறுமுகம் நிரோசன்.





# தியாகி திலீபனுக்கு தலைநகர் கொழும்பில் அஞ்சலி செலுத்தினார் ரவிகரன் எம்.பி.!

**(விஜயரத்தினம் சரவணன்)**

தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் அஞ்சலி நிகழ்வுகள் தமிழர் தாயகப் பகுதிகளிலும், புலம்பெயர்தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இலங்கைத் தலைநகர் கொழும்பில் தியாகதீபம் திலீபனுக்கு இன்று (26) இறுதி நாள் அஞ்சலிகளைச் செலுத்தினார்.

தற்போது செப்ரெம்பர் மாதத்துக்கான இரண்டாவது மாதாந்த நாடாளுமன்ற கூட்டத்தொடர் இடம்பெற்றுவருகின்றது. குறித்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இலங்கைத் தலைநகர் கொழும்பில் தங்கியுள்ளார். இந்த நிலையிலேயே அவரால் கொழும்பில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

தியாகதீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்குச் சுடரேற்றப்பட்டு, மலர் துவப்பட்டு உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# சர்வதேச நீதி கோரி 2 ஆம் நாளாக யாழில் உண்ணாவிரதப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் இரண்டாம் நாளாக இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்தப் போராட்டம் யாழ். செம்மணியில் நேற்று ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி விவகாரத்துக்கு நீதி கோரியும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தப் போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டுள்ள நிலையில், போராட்டத்தின் ஆரம்பத்தில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு முன்னாள் போராளி ஈஸ்வரன் அஞ்சலி செலுத்திப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.









குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரம்: இடத்தை முடிவு செய்வதில் சிக்கல் நீடிப்பு



தவெக தலைவர் விஜய் நாளை பிரசாரம் செய்ய திட்டமிட்டுள்ள நிலையில், பிரச்சார இடத்தை இறுதி செய்வதில் சிக்கல் நீடித்து வருகிறது.

த.வெ.க. தலைவர் விஜய், கரூரில் நாளை பிரச்சாரம் செய்ய லைட்ஹவுஸ் முனை, உழவர் சந்தை உள்ளிட்ட 4 இடங்களை குறிப்பிட்டு பொலிஸில் அனுமதி கோரியிருந்தனர். எத்தனை வாகனங்கள் வரும். எத்தனை பேர் கலந்துகொள்வர் உள்ளிட்ட விவரங்களை அளிக்குமாறு பொலிஸ் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கேட்டனர். ஆனால், இதற்கு உரிய பதிலை வழங்காததால் விஜயின் பிரச்சார இடம் உறுதி செய்யப்படாமல் இருந்தது.

இந்நிலையில் த.வெ.க. பொதுச் செயலாளர் ஆனந்த் நேற்று கரூர் லைட்ஹவுஸ் முனை, கரூர் வேலுசாமிபுரம் ஆகிய இரு இடங்களைப் பார்வையிட்டார். அதைத்தொடர்ந்து. விஜய் பிரச்சாரம் செய்யும் இடத்தை உறுதி செய்வதற்காக மாவட்ட பொலிஸ் அலுவலகத்துக்குச் சென்று மாவட்ட எஸ்.பி.ஜோஷ் தங்கையாவைச் சந்தித்தார். ஒரு மணி நேரத்துக்கு மேலாக ஆலோசனை நடத்திய பிறகு ஆனந்த் புறப்பட்டுச் சென்றார்.

கரூர் உழவர் சந்தை அருகே பிரச்சாரத்துக்கு அனுமதி வழங்கினால், சின்னாண்டாங் கோவில் வீதி வழியாக விஜய் வர வேண்டும் என பொலிஸ் சார்பில் தெரிவிக் கப்பட்டது. ஆனால், அந்தச் சாலை வழியாக வந்தால் மக்க ளைச் சந்திக்க முடியாது எனக் கூறி கோவை சாலை வழியாக வர அனுமதி வழங்க வேண்டும் என த.வெ.க. சார்பில் வலியுறுத்தப்பட்டது.

பிரசார பயணத்தின் போது எத்தனை வாகனங்கள் வரும். எத்தனை பேர் கலந்து கொள்வர் என்ற விவரங்களை பொலிஸ் வழங்கி விட்டதாகக் கூறப்படும் நிலையில், விஜய் பிரச்சாரம் செய்யும் இடம் இன்னும் உறுதி செய்யப்படாமல் சிக்கல் நீடிக்கிறது.

# அ.ம.மு.க. இடம்பெறும் கூட்டணிக்கே 2026ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி

## டி.டி.வி. தினகரன் தெரிவிப்பு



எதிர்வரும் தமிழக சட்டப்பேரவை தேர்தலில், அ.ம.மு.க. இடம்பெற கூடிய கூட்டணிதான் வெற்றிக்கூட்டணியாக அமையும் என அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

அ.ம.மு.க சார்பில், தமிழக சட்டப்பேரவை தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, அம்பத்தூர் சட்டப்பேரவை தொகுதி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் நேற்று மாலை அம்பத்தூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. திருவள்ளூர் மத்திய மாவட்ட அ.ம.மு.க. சார்பில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன், துணை பொதுச்செயலாளர் ஜி. செந்தமிழன், கொள்கை பரப்புச் செயலாளர் சி.ஆர்.சரஸ்வதி, திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் எஸ்.வேதாசலம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில், 2026 சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, அம்பத்தூர் சட்டப்பேரவை தொகுதியில் அ.ம.மு.க. சார்பில் மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து, டி.டி.வி.தினகரன், கட்சி நிர்வாகிகளிடம் விரிவாக எடுத்துரைத்தார்.


இந்த கூட்டத்துக்குப் பிறகு, டி.டி.வி. தினகரன் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“ஒரு கட்சியின் தலைவராக உள்ள பழனிசாமி, இன்னொரு கட்சித் தலைவரை அநாகரீகமாக விமர்சிப்பது அவரின் தரத்தையே காட்டுகிறது. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் என்னை சந்திக்கவில்லை. வாய்ப்பு கிடைத்தால் சந்திப்பேன்.

பழகுவதற்கு, நட்புக்கு சிறந்த நண்பர் அண்ணாமலை. நாடாளுமன்ற தேர்தலின் போது, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய அவரின் செயல்பாடுகளும், தன்மையும் தான் காரணம்.. வேண்டுமென்றே சிலர், எங்களை அவர் தூண்டிவிடுகிறார் என்ற தவறான கருத்துகளை பரப்புகிறார்கள். இன்னொருவர் தூண்டிவிடவேண்டிய அவசியமோ, இன்னொருவர் தூண்டிவிட்டு, நாங்கள் செயல்படுகிற நிலையோ எங்களுக்கு கிடையாது.

பழனிசாமி மாதிரியான பெரிய பெரிய தலைவர்கள் இப்போது சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்கள். நாங்கள் ஜனவரிக்கு பிறகுதான் தேர்தல் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளோம். வருகிற தமிழக சட்டப்பேரவை தேர்தலில், அ.ம.மு.க. தலைமையில் கூட்டணி அமைக்கிற எண்ணமில்லை.

ஆனால், அ.ம.மு.க. இடம்பெற கூடிய கூட்டணிதான் வெற்றிக்கூட்டணியாக அமையும். த.வெ.க. நிர்வாகிகளுடன் அ.ம.மு.க. நிர்வாகிகள் பேச்சு வார்த்தை நடத்துகிறார்கள் என, சில ஊடகங்களில் செய்தி பார்த்தேன். அதெல்லாம் உண்மையில்லை. நாங்கள் எங்கள் கூட்டணி பற்றி டிசம்பர் மாதத்தில் தெளிவாக அறிவிப்போம்.” என்று தெரிவித்துள்ளார்.



# இந்தியாவில் பரவும் புதிய வகை வைரஸ்!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

இந்தியாவில் புதிய வகை வைரஸ் பரவி வருவதாக ஐ.சி.எம்.ஆர். எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மைக்காலமாக டில்லி, மும்பை, கான்பூரில் எச் 3 என் 2 வைரஸ் காய்ச்சல் வேகமாக பரவுவதாகவும், டில்லியில் 11 ஆயிரம் வீடுகளில் எடுக்கப்ப ட்ட ஆய்வுக ளில் 69 சதவீத வீடுகளில் குறைந்தது ஒருவருக்கு இவ்வகை காய்ச்சல் இருப்ப தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கொரோனாபோல அதிதீவிர மாக இருக்காது என்றபோதிலும், எச்ச ரிக்கையுடன் இருக்க ஐ.சி.எம்.ஆர் அறிவுறுத்தியுள்ளது. குழந்தைகள், இதய நோய் உள்ளவர்கள், ஆஸ்துமா பாதிப்பு உள்ளவர்கள் கவனமுடன் இருக்க அறி வுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மருத்துவர்கள் கருத் துத் தெரிவிக்கையில் ”இது ஒரு சுவாச வைரஸ் தொற்று ஆகும். இது 50 வய துக்கு மேற்பட்டவர்கள் மற்றும் 15 வய துக்குட்பட்டவர்களைப் பாதிக்கிறது. இந்த வைரஸால் நோய் எதிர்ப்புச் சக்தி குறை கிறது. மேலும், எச் 3 என் 2 வைரஸ் காய்ச்சல் தொற்றக்கூடியது,

மேலும் பாதிக்கப்பட்ட நபருக்கு அருகில் வசிப்பவர்களுக்கு தொற்று ஏற்படும் அபாயம் அதிகம் உள்ளது. இது குறிப்பாக இருமல், தும்மல் அல்லது பேசும்போது வெளியாகும் சுவாசத் துளிகள் மூலம் பரவுகிறது. எனினும், இந்த வைரஸ் புதியதல்ல. பழைய வைரஸ்தான். இந்த வைரஸின் ஒரு சிறப்பு வகையே இப்போது பரவி வருகிறது.

வானிலை மாறும்போது இந்த வகை பரவுகிறது. பொதுவாக, அறிகுறிகள் அதிக காய்ச்சல், சளி, தொண்டை வலி, தலைவலி, தசை, உடல் வலி, சோர்வு, வயிற்று வலி மற்றும் சில நேரங்களில் குமட்டல் மற்றும் வயிற்றுப்போக்கு போன்றவையாகும்.

ஆனால் சிலருக்கு சுவாசிப்பதில் சிரமம் மற்றும் அதிக காய்ச்சல் இருக்கும். ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங் களில், இந்த வைரஸ் தானாகவே குண மடைகிறது. மக்கள் பொதுவாக 3-5 நாள்களில் குணமடைவார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.





# காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் 30 பாலஸ்தீனர்கள் உயிரிழப்பு



மத்திய மற்றும் தெற்கு காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நேற்று முதல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 30 பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் அஸ்-சவைடா பகுதியில் ஒரே வீட்டிலிருந்த சிறுவர்கள் உள்ளிட்ட 11 பேரும் அடங்குகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் காஸாவில் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 65,419 ஆக உயர்ந்துள்ளதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல்களில் இதுவரை 167,160 பேர் காயமடைந்துள்ளனர் என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# மேற்கு கரையை இஸ்ரேலுடன் இணைக்க அனுமதிக்கமாட்டேன் என்கிறார் ட்ரம்ப்



மேற்கு கரையை இஸ்ரேலுடன் இணைக்க அனுமதிக்கப்போவதில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மேற்கு கரையில் குடியிருப்புகளை அமைக்க இஸ்ரேல் மேற்கொண்டு வரும் நடவடிக்கை குறித்து வெள்ளைமாளிகையில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மேற்கு கரை பகுதிகளை இஸ்ரேலுடன் இணைக்க அனுமதிக்கமாட்டேன். இஸ்ரேல் இந்த நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கமுடியாது. இந்த நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க நேரம் வந்துவிட்டது” எனத் தெரிவித்துள்ளார்.

காசா முனை மற்றும் மேற்கு கரை என இரு பகுதிகளாக பாலஸ்தீனம் உள்ளது. அதேவேளை, மேற்கு கரையில் சில பகுதிகள் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இதனிடையே, மேற்கு கரையில் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை இஸ்ரேல் மேற்கொண்டு வருவதாக பல்வேறு நாடுகள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றன. ஆனாலும், பல்வேறு நாடுகளின் எதிர்ப்பையும் மீறி மேற்கு கரையில் இஸ்ரேல் குடியிருப்புகளை அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 03

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 26/09/2025

## அமெரிக்காவில் கனடியர் கொலை



C3 ▶




# கனடிய தபால் திணைக்களம் தொழிற்சங்கப் போராட்டம்




மத்திய அரசாங்கம் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் பெரும்பாலான வீடுகளில் வீடு தோறும் தபால் விநியோகத்தை நிறுத்தும் திட்டத்தை அறிவித்த சில மணி நேரங்களிலேயே, கனடா தபால் தொழிற்சங்கம் நாடு முழுவதும் வேலைநிறுத்தத்தை அறிவித்துள்ளது.

எங்கள் தபால் சேவையும் தொழிலாளர்களையும் பாதிக்கும் அரசின் முடிவுக்கு எதிராக, உடனடியாக கனடா தபால் திணைக்களத்தில் பணிபுரியும் எங்கள் அனைத்து உறுப்பினர்களும் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர் என தெரிவித்துள்ளது.

C2 ▶

# கனடாவில் தொழில் வாய்ப்பு: லட்சக் கணக்கில் நிதி மோசடி




கனடாவில் தொழில் பெற்றுத் தரவதாகக் கூறி, நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், மூன்று சந்தேக நபர்கள் பம்பலப்பிட்டிய பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரளையைச் சேர்ந்த 69 வயதுடைய ஆண் ஒருவரும், கோனகங்கார மற்றும் பொரளைப் பகுதிகளைச் சேர்ந்த 26 மற்றும் 68 வயதுடைய இரண்டு பெண்களுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்களில் பெண் ஒருவர், கனடாவுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி, பொதுமகன் ஒருவரிடமிருந்து 38 லட்சம் ரூபாயையும் மற்றுமொருவரிடமிருந்து 34 லட்சத்து ரூபாயையும் மோசடி செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், சந்தேகநபர்களிமிருந்து, போலி விசா ஸ்டிக்கர்களும் மீட்கப்பட்டுள்ளன.



# கனடிய காளை ஒன்று கின்னஸ் உலக சாதனை

கனடாவின் ஆல்பெர்டா மாகாணத்தில் உலகின் உயரமான காளை குறித்த அதிகாரப்பூர்வமான தகவல் வெளியிட்டுள்ளது.

வல்கன் பகுதியில் வளர்க்கப்படும் ஹோல்ஸ்டீன் இன காளையான 'பீஃப்' என்ற காளை தற்போது கின்னஸ் உலகச் சாதனைப் புத்தகத்தில் உலகின் உயரமான காளையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக இறைச்சிக்காக வளர்க்கப்படும் காளைகளில் ஒன்றான 'பீஃப்', அதற்கு மாறாக தனது உரிமையாளரான ஜாஸ்மின் என்ட்ஸ் அவர்களால் செல்லப் பிராணியாக வளர்க்கப்பட்டு வருகிறது.

கின்னஸ் பதிவின்படி, 'பீஃப்' இப்போது 1.95 மீற்றர் (6 அடி 5 அங்குலம்) உயரம், 1,090 கிலோ எடை, மேலும் மாதந்தோறும் 1,130 கிலோ அல்ஃபால்ஃபா பச்சிலை (ஒரு மினிவேனின் அளவுக்கு சமமான பசுமை தீனி) உண்ணுகிறது.

தனது புகைப்படம் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறுகிறது என்பதே ஒரு கனவு நனவாகியது போன்ற உணர்ச்சி என ஜாஸ்மின் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டில் பிறந்தபோது சாதாரண அளவிலிருந்த 'பீஃப்', வயதுக்குச் செல்லச் செல்ல அளவுக்கு மீறி வளர்ந்து, இன்று எட்டு ஆண்டுகளில் உலக சாதனையாளனாக மாறியுள்ளது என தெரிவித்துள்ளார்.

தற்போது உலகிலேயே உயிருடன் உள்ள காளைகளில் உயரமான காளையாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதோடு, இத்தாலியில் 6 அடி 8 அங்குலம் உயரம் கொண்ட காளையின் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பும் அதனிடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## கனடிய தபால்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)





வேலைநிறுத்தம் நீடிக்கும் வரை புதிய கடிதங்கள் மற்றும் பொதிகள் ஏற்கப்படமாட்டாது எனவும், சில தபால் அலுவலகங்கள் மூடப்படும் என்றும் கனடா தபால் பேச்சாளர் லிசா லியூ கூறியுள்ளார்.

அரச நலத் தொகை காசோலைகள் மற்றும் ஏற்கனவே உள்ள உயிருடன் கொண்டுசெல்லப்படும் விலங்குகள் மட்டுமே விநியோகிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தம் குறிப்பாக விடுமுறை கால பார்சல் விநியோகத்துக்கு பெரும் சவாலாக இருக்கும் என்று சிறு தொழில் சங்கங்கள் மற்றும் வணிக அறைகள் கவலை தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டு நடந்த வேலை நிறுத்தம் மட்டும் சிறு தொழில்களுக்கு 1 பில்லியன் டாலருக்கும் மேல் இழப்பை ஏற்படுத்தியதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்காவில் கனடியர் கொலை



அமெரிக்காவின் விஸ்கான்சின் மாநிலத்தில், கனடாவைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உயிரிழந்தவர் ஒன்டாரியோவில் பிறந்த ஜியோவன்னி மைக்கேல் ராபின்சன் என அவரது குடும்பத்தினர் உறுதிப்படுத்தினர்.

லேக் மிச்சிகனின் மேற்கு கரைக்கு அருகிலுள்ள ஷிபோய்கன் ஃபால்ஸ் பகுதியில் சுற்றுலா மேற்கொண்டுள்ளார்.

நள்ளிரவு 12 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற தகவலினைத் தொடர்ந்து, அப்பகுதி பொலிஸார் துரித கதியில் விசாரணை நடத்தியுள்ளனர்.

படுகாயமடைந்த ராபின்சனுக்கு முதலுதவிகள் வழங்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ராபின்சனை ஒரு கருப்பு நிற சிறிய வாகனத்தில் வந்தவர்கள் துப்பாக்கியால் சுட்டனர் என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

ராபின்சனின் மரணம் தொடர்பில் அவரது கிராமத்து மக்கள் கடும் அதிர்ச்சியை வெளியிட்டுள்ளனர்.



# கனடாவின் மொண்ட்ரியல் நகரில் வெஸ்ட் நைல் வைரஸ் தொற்று

கனடாவின் மொண்ட்ரியல் நகரில் வெஸ்ட் நைல் வைரஸ் தொற்றுகள் அதிகரித்து, சுமார் பத்து நோயாளிகளில் நரம்பியல் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை வரையிலான தகவலின்படி, இந்த ஆண்டில் மொண்ட்ரியலில் 25 தொற்று சம்பவங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அதில் 23 சம்பவங்கள் செப்டம்பர் மாதத்திலேயே பதிவாகியுள்ளன. இது 2010-2019 காலப்பகுதியில் செப்டம்பர் மாதத்திற்கான சராசரி (8.8) விட குறிப்பிடத்தக்க உயர்வாகும்.

2018இல் பதிவான 33 சம்பவங்களே இதுவரை அதிகபட்ச எண்ணிக்கை என்பது குறிப்பிடத்தக்கது. புதிய சம்பவங்கள் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் மொண்ட்ரியல் தீவிலேயே தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

உறுதிப்படுத்தப்பட்ட 25 பேரில் 21 பேர் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள். அவர்களில் குறைந்தது பத்து பேருக்கு நரம்பியல் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த பருவ காலத்தில் கியூபெக் மாகாணத்தின் முதல் மேற்கு நைல் தொற்று ஆகஸ்ட் 21ஆம் திகதி மொண்ட்ரியல் பகுதி ஒருவரிடம் உறுதி செய்யப்பட்டது.

இவ்வைரஸ், பெரும்பாலும் நுளம்புக் கடி மூலமாக பரவுகிறது எனவும் தொற்றுக்குப் பிறகு 2 முதல் 15 நாள்கள் வரை அறிகுறிகள் தோன்றக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.